சார்பு நீதிமன்றம் மதுராந்தகம்

MCOP No. 14/2024

பெயர். திருமதி. சகுந்தலா நாள் 25.06.2025
த/பெ.

**<u>மனுதாரர் சா.1 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1) விபத்தை நான் நேரயடியாகப் பார்க்கவில்லை என்றால் சரிதான். என் மகளின் தொழில் மற்றும் வருமானத்தை நிரூபிக்க ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கு மொத்தம் இரண்டு ஆண் மற்றும் 2 பெண் பிள்ளைகள். புகாரை தீனதயாளன் மகன் குமார் என்பவர் காவல் நலையத்தில் அளித்தார் என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் என் மகன் இருசக்கர வாகனத்தில் இருந்து நிலைதடுமாறி கீழே விழுந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. இருசக்கர வாகனத்தை ஓட்டியவர் என் மருமகன் விஸ்வநாதன். விபத்தில் இறந்தவர் எனது மகள். பரிமளாவிற்கு பிள்ளைகள் இல்லை. பரிமளாவிற்கு நாங்கள்தான் வாரிசுகள் என்பதற்கு வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை. விஸ்வநாதன் வாகனத்தை ஓட்டத் தெரியாமல் ஓட்டிச் சென்று விபத்தை ஏற்படுத்தினார் என்றால் குறுக்கே மாடு வந்ததால் விபத்து ஏற்பட்டது. வேறு வண்டி இடித்ததாக குறிப்பு இல்லை என்றால் சரிதான்.

2) விஸ்வநாதன் இருசக்கர வாகனத்தை ஓட்ட, அவரே நிலைதடுமாறி கீழே விழுந்து, பின்னால் அமர்ந்திருந்த பரிமளாவின் இறப்பிற்கு காரணம் என்பதால் நானும், அதே விஸ்வநாதனான 2ம் மனுதாரரும், 2ம் எதிர்மனுதாரரிடம் நஷ்ட ஈடு கோர இயலாது என்றால் சரியல்ல. என் மகளுக்கு தலையில் காயம் என்றால் சரிதான். என் மகளின் விபத்துப் பதிவேட்டு நகல்

தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்துப் பதிவேடு நகலில் விஸ்வநாதன் நிலைதடுமாறி கீழே தானாக விழுந்ததால் பரிமளாவிற்க காயம் ஏற்பட்டதாக குறிப்பு உள்ளது என்றால் சரியல்ல. அதனால்தான் விபத்துப் பதிவேடு நகலை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மனு நிலைக்கத்தக்கதல்ல என்றாலும் என்னுடைய மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றாலும் சரியல்ல. வெவ்வேறு தலைப்புகளின் கீழ் நான் கோரியுள்ள இழப்பீட்டுத் தொகை மிக அதிகம் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.